Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | மாசி 20 | திங்கட்கிழமை (04.03.2002) | தொலைபேசி 3378 | ஒலி 75

றெனி மூக்குக் கண்ணாடி அகம்
கண் பரிசோதித்து கண்ணாடி
540, ஆஸ்பத்திரி வீதி,
RENNY

இந்தியாவின் மக்களவை

## சபாநாயகர் பாலயோகி ஹெலி விபத்தில் மரணம்

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் ஜி.எம்.சி.பாலயோகி நேற்று ஹெலிகொப்டர் விபத்தொன்றில் மரணமடைந்தார் அவருக்கு வயது 51.

நேற்றுக் காலை 7.40 மணியளவில் ஆந்திரத்தில் இடம்பெற்ற ஹெலி விபத்தின் போதே இம் மரணம் சம்பவித்தது. இவ் விபத்தில் விமானஓட்டியும், பாலபோதியின் உதவியாளரும், மெய்க்காப்பாளரும் பலியாகியுள்ளனர்.

தனியார் ஹெலி ஒன்றின் மூலம் ஹைதரபாத்துக்கு பயணத்தை மேற்கொண்ட போது ஹெலிகொப்டர் புறப்பட்டு 10 நிமிடங்களுக்குள் விபத்துக்குள்ளாகி குளம் ஒன்றினுள் வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகினறது. சபாநாயகர் பாலயோகியின் மரணத்தையடுத்து மத்திய அரசு

(8ம் பக்கம் பார்க்க)

புரிந்துணர்வு ஒப்பந்தம்

## பாராளுமன்றில் இன்று விவாதம்

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக இன்று பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான விவாதம் ஒன்று பாராளுமன்றத்தில் நடைபெற வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடம் விடுத்த கோரிக்கையை அடுத்தே புரிந்துணர்வு உடன் படிக்கை தொடர்பான விவாதம் இன்று பாராளுமன்றில் ஆரம்பமாகவுள்ளது. இன்று ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற விவாதம் நாளைவரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (வ)

பாதை திறப்பதை ஆராய

# பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன எழுதுமட்டுவாளுக்கு திடீர் விஜயம்!

## படைஅதிகாரிகளுடன் ஆலோசனை

(வலம்புரி பாதுகாப்புச் செய்தியாளர்)

**யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதை ஒன்றைத் திறப்பது தொடர்பாகவும், குடாநாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராயும் பொருட்டும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன பருத்தித்துறை, நாகர்கோவில், எழுதுமட்டுவாள் ஆகிய பகுதிகளுக்கு நேற்று திடீர் விஜயம் செய்து படையதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.**

ஓயாத அலைகள் படைநடவடிக்கை மூலம் ஆனையிறவை விடுதலைப்புலிகள் கைப்பற்றிய பின் இராணுவத்தினர் எழுதுமட்டுவாளில் தமது கடைசிக் காவலரணை அமைத்திருந்தனர்.

இக் காவலரண் பகுதியில் ஆனையிறவில் இருந்தது போன்று கட்டடங்களை அமைத்து யாழ்-கொழும்பு பயணிகளை அங்கு வைத்து சோதனை செய்தபின்னர் அவர்கள் பயணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கு அமைவாக, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு பருத்தித்துறை நாகர்கோவில், எழுதுமட்டுவாள் ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள பாதுகாப்பு நிலைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

ஒப்பந்த மீறலைஅவதானிக்க

## சர்வகட்சிக் கண்காணிப்பு குழு அமைக்கப்படும்.

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கண்காணிப்பதற்கு சர்வகட்சி கண்காணிப்புக் குழு அமைக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். குழுவில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிப் பிரதிநிதிகள் இடம் பெறவுள்ளனர்.

லங்கா சமசமாசக் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பட்டிவீரக்கோன் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே இக்கண்காணிப்புக் குழு அமைக்கப்படவுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். (வ)

## களுத்துறைக் கைதிகள் ஐவர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் ஐந்து பேர் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

தம்மீதான வழக்கு விசாரணையை துரிதப்படுத்துமாறு அல்லது தம்மை விடுதலை செய்யுமாறு கோரியே இவ்வுண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப கைதிகள் ஐவரும் இருவாரங்களுக்கு முன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபர்,இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் உட்பட பல அரசியல் தலைவர்களுக்கும் கடிதங்கள் அனுப்பியும் இதுவரை எவ்விதமான பதில்களும் கிடைக்காததை அடுத்து இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (ந-4)

## கொழும்பு - யாழ். பயணசேவை 30 சொகுசு பஸ்களுக்கு அனுமதி

(கொழும்பு)

கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதை திறக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவரும் வேளையில் சுமார் எண்பதுக்கும் அதிகமான தனியார்"சொகுசுபஸ்" உரிமையாளர்கள் பஸ்சேவை நடத்துவதற்கான அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளதாகவும், இவர்களில் 30 பஸ் உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் வீதிப் போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பி.எம் குணத்தின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பு-யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்-கொழும்பு பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக முதலில் சொகுசு பஸ் உரிமை

(8 ம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசுக்கு எதிராக வழக்கு

### சிஹல உறுமய தாக்கல் செய்யுமாம்

(கொழும்பு)

இந்திய இலங்கை ஒப்பந்தப்படி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து இந்தியா ஆயுதங்களைக் களைய எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என இந்திய அரசுக்கு எதிராக இந்திய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சிஹல உறுமய கட்சித் தலைவர் திலக் கருணரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இந்திய இலங்கை ஒப்பந்தத் தின் பிரகாரம் இந்திய அரசு விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையவில்லை. இதனால் இந்திய அரசுக்கு எதிராக இந்திய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உடன் ரத்துச் செய்யவேண்டும்!

### ஜனாதிபதியிடம் ஜே.வி.பி கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஜே.வி.பி யினர் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவை நேற்று இரவு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்தே இப் பேச்சுவார்த்தையில் அதிமுக்கிய கவனம் எடுக்கப்பட்டதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வுடன்படிக்கையை ரத்துச் செய்வதற்கு அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தை இத்தருணத்தில் பயன்படுத்த வேண்டும்.

இவ் ஒப்பந்த விடயத்தில் வெளிநாட்டு தலையீடுகள் அதிகரித்துள்ளன. அதனைத் தடுத்து நிறுத்துவதும் ஜனாதிபதியின் கடமை என ஜே.வி.பியினர் வலியுறுத்திக் கூறியுள்ளனர். (ந-4)

## சிறு விளம்பரம்

### தவறி விட்டது

ஞானபாலசிங்கம் யாழினி என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.827571636V), விசேட அடையாள அட்டை (இல 0903030028) என்பன யாழ் பஸ் நிலையத்திற்கும். ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் J. T. I. இல. 7பலாலி வீதி, யாழ்ப்பாணம் அல்லது J. T. I. 11/ 10B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்

(கி-3626)

### வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(அராலி)

பண்ணாகம்மெய்கண்டான் வித்தியசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு அதிபர் எஸ். நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-214(

### 146தேர்தல் வன்முறை பதிவாகியுள்ளது

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்றுமுன்தினம் வரை 146 தேர்தல் வன்முறைகள் பதியப்பட்டுள்ளதாக தேர்தலைக் கண்காணிக்கும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது

இதில் ஐ.தே.க 66முறைப்பாடுகளையும், பொ.ஐ. முன்னணி 46 முறைப்பாடுகளையும், ஜே. வி. பி 24முறைப்பாடுகளையும் பதிவு செய்துள்ளன. (ந.4)

### குறுக்குவழியில்

களைச் செய்து, வருந்திப் பொருள் சம்பாதித்துத் தங்கள் அனுபவத்தின் பொருட்டும், தருமத்தின் பொருட்டும் செலவு செய்து வாழ்ந்திருக்கக் கடவர்கள்.

நன்றி
இன்பத்தமிழ்.

---

# இலங்கை இனப்பிரச்சினைக்கு பிரிந்து செல்லும் உரிமையைக் கொண்ட கனேடிய சமஷ்டி முறையே தீர்வாகும்

## மு. சிவசிதம்பரம் எம். பி. சண்டே லீடருக்கு பேட்டி

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் தன்னுடன் ஆலோசனை நாடத்தவில்லை என்று பிரதமரை ஜனாதிபதி குற்றஞ்சாட்டியிருந்தது பற்றி தமிழர் தேசிய முன்னணி தலைவர் மு. சிவசிதம்பரம் சன்டேலீடர் பத்திரிகைக்கு பேட்டியொன்றை அளித்துள்ளார். அப்பேட்டியில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றி மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக ஜனாதிபதியுடன் உரையாடியுள்ளார் ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள விடயங்கள் பற்றி அறிந்துகொண்டுள்ளார் அதுமட்டுமல்ல; இரண்டு அமைச்சரவைக் கூட்டங்களிலும் பிரதமர் இதனை விளக்கிக் கூறி அங்கீகாரம் பெற்றுள்ளார் பொறுப்புள்ள அரசுத்தலைவராகவும் அமைச்சரவைத்தலைவராகவுமுள்ள ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காதிருப்பது அவரின் குற்றமாகும்.

உண்மையில் சர்வதேச நாடுகளின் ஆதரவு எமக்குக் கிடைப்பது அரிது. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது அவர் உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் பற்றி உரையாடியதுடன் தனிநாட்டமைக்கும் தேவையையும் எடுத்து விளக்கினர். இந்தியாவும்ஏனைய நாடுகள் பலவும் இலங்கைத் தமிழர்களின் வேதனைகள் நியாயமானவை என்று ஏற்றுக் கொண்டன.

ஆனால் இப்பிரச்சினையின் தீர்வுக்கு தனியரசு ஒன்று வேண்டும்தானா என்றும் கேள்வியெழுப்பியிருந்தன.

இதனைத் தொடர்ந்தே ஜெ.ஆர்.ஜயவர்த்தன கூட்டிய சர்வகட்சி மகாநாட்டில் நாம் தனியரசு ஒன்றிற்கு குறைவாய் ஒருதீர்வை சமர்ப்பித்தல் அதனை தமிழ்மக்களின் அங்கீகாரத்திற்கு விடத் தயாராயிருப்பதாக தெரிவித்தோம் இதுவேநாம்கொண்டிருக்கும் நிலைப்பாடாகும் ஒருசமஷ்டிஆட்சி நல்ல தீர்வாக இருக்கமுடியும் கனடாவின் பினான்சுமக்கள் வாழும் கியூபெக் மாகாணம் பிரிந்து செல்லும் உரிமையைக் கொண்டதாயினும் இதற்கென அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது மக்கள் பிரிந்துசெல்லவிரும்பவில்லை அதுபோன்றதொரு சமஷ்டியாட்சி எமது இனப்பிரச்சினைக்கு நல்லதீர்வாகலாம் என்பது எனது நம்பிக்கை இவ்வாறு சிவசிதம்பரம் எம்.பி அப்பேட்டியின்போது தெரிவித்தார். (ந)

---

### இலட்சார்ச்சனை

(கல்வியங்காடு)

கல்வியங்காடு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து 11ஆம்திகதி வரை இந்த அர்ச்சனை நடைபெறும் 12ஆம் திகதி சங்காபிஷேகம் இடம் பெறும்.

(எ-30)

---

## இராசி பலன்

4- 3- 2002
(மாசி 20, திங்கள்)
சஷ்டி, பி. இ 2. 54 வரை
விசாகம் வை 4. 44 வரை
ராகு காலம்- 7. 57- 9. 27
நல்ல நேரம்- 12. 27- 1. 57

**மேடம்**
சுவாரஸ்யம், நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம், குடும்ப நன்மை.

**இடபம்**
சத்துரு ஜெயம், மன மகிழ்ச்சி, முயற்சி நிறைவேறும், பொருள் சேர்க்கை.

**மிதுனம்**
காரிய தாமதம், புத்திரரால் சோகம், சொத்துக்களால் நன்மை, மனச்சஞ்சலம்.

**கடகம்**
சரீரவியாதி, உடல்சோர்வு, காரிய தாமதம், செல்வாக்கு குறைவு.

**சிங்கம்**
இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, குழுமுயற்சி, காரிய அனுகூலம்.

**கன்னி**
வாக்கு கலகம், நிலைப் பிரிவு, தொழில் நன்மை, பெண்கள் நட்பு.

**துலாம்**
ஜனவசியம், நல்ல முயற்சி, பெரியோர் ஆதரவு, ஆரோக்கியம்.

**விருச்சிகம்**
சயன சுகக் குறைவு, காரிய அலைச்சல், கோபப்படுதல், திடீர் நன்மை.

**தனுசு**
காரிய நன்மை, பொருள் வரவு, பெருமை, மனமகிழ்ச்சி

**மகரம்**
முயற்சி நிறைவேறும், அதிக பிரயாசை, தொழில் மேன்மை, அதிகாரம்.

**கும்பம்**
நிலைமாற்றம், பிரயாணம், தந்தைவழி உறவு, முயற்சி தாமதம்.

**மீனம்**
எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், வியாதி, விவாதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

---

## அனுருத்தவும் இருமகனும் நீதிமன்றில் இன்றுஆஜர்

(கண்டி)

கண்டிமடவளைப் படுகொலை சம்மந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்தை மற்றும் அவரது மகன்களான சானுகரத்வித்த ரொஜான் ரத்வத்த உட்பட 35 சந்தேக நபர்கள் இன்று தெல்தெனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

மடவளைப் படுகொலை சம்மந்தமாக கைது செய்யப்பட்டவர்களில் 31பேர் இராணுவத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தெல் தெனிய நீதி மன்றத்தில் இன்று ஆஜர் செய்யப்படவுள்ள 35 சந்தேக நபர்களும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படுவார்கள் என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

### சவுதியிலிருந்து தப்பி வந்தோர் கைது

(கொழும்பு)

சவுதி அரேபியாவில்மீன்பிடி நிறுவனமொன்றில் பணியாற்றிய 5இலங்கையர்கள் தாம் பயன்படுத்திய படகு மூலம் நீர்கொழும்பு மண்குழி துறைமுகத்திற்குத்தப்பி வந்தபோது நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(எ- 4)

---


### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம யாழ். கிளை

## பொதுக் கூட்டமும், தேர்தலும் - 2002

இலங்கை செஞ்சிலுவைச்சங்க கொழும்புத் தலைமையக செயலாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவும், புதிய யாப்பின் பிரகாரமும் கிளையின் பொதுக்கூட்டமும், தேர்தலும் பின்வருமாறு நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**நியமனப் பத்திரம் கோரும் பதவிகள்**

தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர்
நிர்வாகக்குழு உறுப்பினர் - 06

நியமனப்பத்திரங்கள் வழங்கல்:
18-03-2002 22-03-2002
(மு. ப. 10-00 மணி பி. ப. 4-00 மணி வரை)
(ஒரு நியமனப்பத்திரம் ரூபா. 250-00 செலுத்தி யாழ் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்)

நியமனப்பத்திரங்கள் யாழ்கிளையில் ஏற்றுக் கொள்ளல்:-
25-03-2002
(மு. ப. 9-30 மணி - பி. ப, 2-00 மணி வரை)

பொதுக்கூட்டமும், தேர்தலும்:-
21-04-2002 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10-00 மணி

நடைபெறும் இடம்;-
இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைமையகம்
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

இவ் அறிவித்தலை பொதுக்கூட்டத்திற்கான முன்னறிவித்தலாக ஏற்றுக்கொள்வதுடன் மேலதிக விபரங்களை பிரிவுகளில் அல்லது யாழ். கிளையில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கௌரவ செயலாளர்

2002-03-02 (C/3625)


---


### மணநீக்கத் தீர்வையெழுதி மணவிலக்கு அளிக்கும் பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாண - மாவட்ட நீதிமன்றம்

மருதமுத்து சந்திரசேகர்
337, கஸ்தூரியார் வீதி,

வழ. இல;- மணவிலக்கு/ 168

யாழ்ப்பாணம்
- வழக்காளி

எதிராக

சந்திரசேகர் பெண் பத்மலலிதா,
8ம், வட்டாரம், புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

-- எதிராளி-

மேற்குறித்த இலக்க வழக்கு யாழ்ப்பாண பதில் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் முன்பாக 2001ம் ஆண்டு மார்கழி மாதம் 14ந் திகதியன்று வழக்காளியும், வழக்காளியின சட்டத்தரணிகள், திருவாளர்கள் கனகரத்தினம் (அசோசியேட்ஸ் நிறுவனத்தினர்) பிரசன்னமாயிருக்க முடிவெய்ய வந்த போது மேற்குறித்த எதிராளிக்கு இவ்வழக்கில் அழைப்புக் கட்டளை உள்ளூர் தேசிய பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டு அவர் இவ்வழக்கில் தோன்றி மறுமொழி அணைக்கத் தவறியமையால்.

இவ்வழக்கு எதிர்ப்பில்லா விளக்கத்துக்கு எடுக்கப்பட்டு, மேற்குறித்த எதிராளி வழக்காளியை வேண்டுமென்று துறந்தார் என்ற குற்றத்தைப் புரிந்துள்ளார் என மன்று கருதியதால் பின்வருமாறு மன்று கட்டளையிட்டு தீர்வையளித்துள்ளது.

இப்பின்னுறுதித் தீர்வை உள்ளூர், தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அதனடுத்த (3) மூன்று மாதகாலத்துக்குள்மேற்குறித்தஎதிராளிஇப்பின்னுறுதித் தீர்வையை இம்மன்றின் முழு விதிப்பாக ஏன் எழுதக் கூடாதென்பதற்குத் தகுந்த காரணங்கள் காட்டினாலன்றி மேற்குறித்த எதிராளி வழக்காளியை வேண்டுமென்று துறந்தார் என்ற காரணத்துக்காக மேற்குறித்த வழக்காளிக்கும் எதிராளிக்கும் 1997ம் ஆண்டு ஆனி மாதம் 6ந்திகதி நடைபெற்ற விவாகப் பதிவை ரத்துச் செய்து ஒரு மணநீக்கத் தீர்வையை இம்மன்று விதிக்கிறதென இம்மன்று கட்டளையிட்டுத் தீர்வையளித்துள்ளது.

இப்பின்னுறுதித்தீர்வை இம்மன்றின் முழுவிதிப்பானவுடன், இவ்வழக்கின் எதிராளி தனது கன்னிப் பெயரான பரமானந்தம் மகள் பத்மலலிதா என்ற பெயரை மீளப்பெற்று, மணமாகாத பெண்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவித்து வரலாமென இம்மன்று கட்டளையிட்டுத் தீர்வையளிக்கின்றது.

2001ம் ஆண்டு மார்கழி மாதம் 14ந் திகதி.

ஒப்பம் இ. த. விக்னராசா
மாவட்ட நீதிபதி,
மாவட்ட மன்று, யாழ்ப்பாணம்

என்னால் வரையப்பட்டது.
ஒப்பம் (கனகரத்தினம் அசோசியேட்ஸ்)
வழக்காளியின் சட்டத்தரணி (4764)

# வடபகுதி மக்கள் எதை மறந்தாலும் கல்வியை மறக்க மாட்டார்கள்

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)

யுத்த நெருக்கடிகளின் மத்தியில் கல்வியும், விளையாட்டும் கவனத்துடனும், கட்டுப்பாட்டுடனும் இங்கு பின்பற்றப் படுகின்றன. வசதிகளும் வாய்ப்புக்களும் இல்லாத இக்கட்டான சூழ்நிலையில் நீங்கள் ஆற்றும் பணி மகத்தானது.

யாழ்ப்பாணம் பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவனும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ஆர். ஈ சித்திரா ரஞ்சன் மேற்படி கல்லூரியின் விளையாட்டுப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் கல்லூரி அதிபர் அருட்தந்தை எம். ஜெரோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

சித்திரா ரஞ்சன் மேலும் பேசுகையில்; பாடசாலை நாட்கள் ஒருவருக்கும் திரும்பி வரமாட்டாது. எந்தத் தடை வந்தாலும் மாணவர்கள் கல்வியைத் திறம்படக் கற்றுக் கொள்ள வேண்டும்.

வடபகுதியில் வாழும் தமிழ் மக்கள் எதை மறந்தாலும் கல்வியை மறக்க மாட்டார்கள். கல்விக்காக எதையும் தியாகம் செய்வார்கள். இந்தப் பாரம்பரியத்தை மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் உங்கள் திறமையும் ஆர்வமும் சிறப்போடு விளங்க வேண்டும். விளையாட்டுத்துறை அமைச்சர் யோன்சன் டி அல்விஸ் யாழ்ப்பாணத்தில் தேசிய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்த உதவுவதாக வாக்குறுதி அளித்துள்ளார். எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன் இப்போட்டிகளை நடத்த ஒழுங்குகள் செய்து வருகிறோம். இத்தகைய ஒரு போட்டி கடந்த 30 வருடங்கள் வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லை என்றார். (எ)

# யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது மகிழ்ச்சியே

## கம்யூனிஸ்ட் பிரமுகர் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகின் ஒவ்வொரு நாடுகளிலும் பல உள்ளூர் பிரச்சினைகள் இருந்து வருகின்ற போதிலும் இலங்கையில் காணப்படும் இனப்பிரச்சினையானது சிக்கலுக்குரிய ஒன்றாகவே இருந்து வருகின்றது.

இவ்வாறான ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டமையை நினைத்து மகிழ்ச்சியடைய வேண்டும் என கம்யூனிஸ்ட். கட்சியின் பிரதம செயலாளர் குணசேகர விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் சகல இன மக்களின் வாழ்வை நிச்சயிப்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான ஒரு தீர்வையேநாடு எதிர்பார்க்கின்றது இதனை விட கட்சி சார்பற்ற முடிவுகளையும் எடுக்க வேண்டும் என்பதுடன் எதிர்க்கட்சியினரும் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (க-8)

## நீதிமன்ற உத்தரவில் கைதானவருக்கு

# பிணை வழங்குமாறு வற்புறுத்த முடியாது

(கொழும்பு)

நீதி மன்ற உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு பிணைகள்வழங்க வேண்டும் என்று எந்த ஒரு நபரும் நீதிமன்றத்தை வற்புறுத்தக்கூடாது. என கொழும்பு பிரதம நீதியரசர் சீமந்த வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றத்தடுப்புப் பிரிவின் கீழ் விளக்கமறியலில் உள்ளவர்களுக்கு மாஜிஸ்திரேட் நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம் என்பனவே இத்தகைய பிணை அனுமதியினை வழங்கமுடியும்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக ஆளும்கட்சியோ அல்லது எதிர்க் கட்சியோ தலையிட்டால் நீதிபரிபாலனத்துறையின் அலுவல்களில் அவர்கள் தலையிடுவதாக கருதப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார் (க-08)

## நிவாரண விநியோகம்

# அரிசிக்குப் பதில் மா இடம்பெயர்ந்தோர் விசனம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணத்தில் அரிசிக்குப் பதிலாக சில பலநோக்குக கூட்டுறவுச் சங்கங்கள் கோதுமை மாவினை வழங்கி வருவதாக யாழ் அரசஅதிபரிடம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தமக்களுக்கு வழமையாக அரிசி,சீனி பருப்பு, பால்மா ஆகிய பொருட்களே வழங்கப்பட்டு வந்தது.

அரசாங்கம் கோதுமை மாவின் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதை அடுத்து மாவின் விலை குறையலாம் என்ற அச்சம் காரணமாகதற்போது கையிருப்பில்உள்ள கோதுமை மாவினை நிவாரணத்திற்கு மூட்டைக் கணக்கில் வழங்கி வருவதாகவும் இதனால்நிவாரணம் பெறும் மக்கள் விசனம் அடைந்து கூட்டுறவு ஆணையாளர் அலுவலகம் செயலகம் ஆகியவற்றுக்கு புகார் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்சப்படுகிறது. (ம)

## தபாலகம் மீண்டும் சொந்த இடத்தில்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இடம்பெயர்வின் போது வடமராட்சிப் பகுதியில் இயங்கிய மீசாலை தபாலகம் மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. (செ-124)

# ஆசியஅபிவிருத்திவங்கியின் தலைவர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ரடோச்சினோ இன்னும்சில தினங்களில் இலங்கைக்கு விஜயம்செய்ய உள்ளதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில் இலங்கை வரும் ஆசியவங்கித்தலைவர் எதிர்வரும் 08ஆம் திகதி அளவில் இலங்கை உடனான வறுமைகுறைப்பு பங்குடமை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அலுவலகம் ஒன்றும்திறந்து வைக்கப்படவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## அரசு புலிகள்

# புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்திற்கு வித்திடும்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இருதசாப்தங்களாக நாட்டில் நடைபெற்றுவந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் நோக்குடன் பிரதமராலும்பிரபாகரனாலும் புரிந்துணர்வு அடிப்படையில்கைச்சாத்திட்ட நிரந்தரயுத்த நிறுத்தமானது சமாதானத்தை மேலும் வழி நடத்திச் செல்வதற்கு வித்திட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் டிரோன்பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளின் முன்னெடுப்பாக இதற்குமுன்னுள்ள அரசாங்கங்கள் யுத்த நிறுத்தங்கள் பலதடவைகள் கடைப்பிடிக்கப் பட்டிருந்தாலும் பிரதமர் ரணில்ஆட்சியிலேயே ஒருஸ்திரமான யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது என்பதுடன் முதற்தடவையாக அதனை கண்காணிப்பதற்கென வெளிநாட்டு அவதானிகள் குழுவும் இங்குவந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில் மக்கள் விடுதலை முன்னணி,சிங்களதேசிய யாதிக சங்கம் என்பன நாட்டில் ஏற்பட இருக்கும் சமாதான முயற்சிகளை குழப்பும் வகையில் குந்தகமான செயல்களில் ஈடுபட்டு வருகின்றன எனச்சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகநாடுகள் யாவும் யுத்த நிறுத்தம் கைச்சாத்திடப்பட்டதை முழுமனதுடன் வரவேற்றுள்ள இந்நேரத்தில் 1கோடியே 80இலட்சம் மக்கள் வாழும் இன்நாட்டில் 18 சதவீதமாகவுள்ள தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு பகுதிகளை நோர்வே நடுநிலையான யுத்தநிறுந்தம் மூலம் விற்றுவிட பிரதமர் திட்டம் தீட்டியுள்ளார் என இடதுசாரிகள் கூறுகின்றனர் எனவும் தெரிவித்துன்ளார். (க-8)

# யாழ். சிறைச்சாலையிலுள்ள இந்திய மீனவர்கள் நால்வர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாக் கடலில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடற்படையினரால் கைது செய்யப் பட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 26 இந்திய மீனவர்களில் நான்கு பேர் யாழ்.நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் விசாரணையைத் துரிதப்படுத்தி விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்ததையடுத்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இப்பணிப்புரைக்கமையவும் இவர்கள் மீது வேறு குற்றச் சாட்டுக்கள் இல்லாமையாலும் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக யாழ் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பிரஸ்தாப மீனவர்கள் நால்வரும் காரைநகர் கடற்படையினரிடம்ஒப்படைக்கப் பட்டு பின்னர் இந்திய கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

## இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மோட்டரோலா உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று மு.ப.11.00மணிக்குமீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது. (க-03)

## முட்டை விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணப் பகுதியில் முட்டைவிலை வீழ்ச்சியடைந்துள்ளது. ஒன்பது ரூபாவாக விற்ற முட்டை தற்பொழுது ஐந்து ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. (செ-124)

# வலைப்பந்து, கரப்பந்து சங்கானைக் கோட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சங்கானைக் கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையே25, 26,ஆம் திகதிகளில் வட்டு இந்துக்கல்லூரி, வட்டு மத்திய கல்லூரிமைதரனங்களில்நடைபெற்று முடிந்த வலைப்பந்து, கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்.

**15 வயதின் கீழ் வலைப்பந்தாட்டம்**

முதலாமிடம்:வட்டு மத்திய கல்லூரி இரண்டாமிடம்: சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி, மூன்றாம் இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி

**17 வயதின் கீழ்**

முதலாமிடம்: விக்ரோறியாக் கல்லூரி இரண்டாம் இடம்:யாழ்ப்பாணக் கல்லூரி மூன்றாம் இடம்: சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

**19 வயதின் கீழ்**

முதலாம் இடம்: வட்டு மத்திய கல்லூரி.

இரண்டாம் இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி.

மூன்றாம் இடம்: வட்டு இந்துக் கல்லூரி.

**17 வயதின் கீழ்கரப்பந்தாட்டம்**

முதலாம் இடம்: வட்டு மத்திய கல்லூரி.

இரண்டாம் இடம்: சங்கானை சிவப்பிரகாச மகாவித்தி.

மூன்றாம் இடம்: வட்டு இந்துக் கல்லூரி.

**19 வயதின் கீழ்**

முதலாம் இடம்: வட்டு மத்திய கல்லூரி.

இரண்டாம் இடம்: சங்கானை சிவப்பிரகாச வித்தி.

மூன்றாம் இடம்: விக்ரோறியாக் கல்லூரி. (உ-3)

# இலங்கை இன விவகாரத்திற்கு தீர்வு காண்பதே மிக முக்கியம்

## சப்ரகமுவமாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதில் முன்நிற்பவர்கள் பிரதமரா ஜனாதிபதியா? என்ற கேள்விக்கு இடமளியாது அதனை எவ்வாறான வழிகளை கையாள்வதன் மூலம் தீர்வுக்கு கொண்டுவரலாம் என்பதே முக்கியம்.

இரத்தினபுரியில் கட்டடம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும் போது சப்ரகமுவா மாகாண முதலமைச்சர் றொகான்எல்லாவலமேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரதான இருகட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும்ஐக்கிய தேசியக் கட்சியும் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாகவும் அரசியல்வாதிகளாகவும்இருக்க வேண்மொனால், ஒன்றுக்கொன்று முரணாககுற்றம் சாட்டிவருவதனை தவிர்த்துக் கொள்வதே தீர்வுக்கு வழியாகும்.

இன்றைய நிலையில் நாடு எதிர் நோக்கும் பொருளாதார சீரழிவுகள், அபிவிருத்தி திட்டங்கள் என்பவற்றினை கருத்தில் கொண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக் கூடியவழிகளில் முக்கிய கட்சிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் உரையாற்றினார். (க-8)

## உலக தலைவர்களை சந்திக்க ஜனாதிபதி தயக்கம்

# அவுஸ். மாநாட்டில் கலந்து கொள்ளாமைக்கு இதுவே காரணம் என்கிறது ஐ. தே. முன்னணி

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொள்ளாமல் தவிர்த்தமைக்கு, சர்வதேசத் தலைவர்களைச் சந்திப்பதில் அவருக்கு ஏற்பட்டுள்ள குற்ற உணர்வே காரணமென்று ஐக்கிய தேசிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கடுமையாக ஜனாதிபதி எதிர்த்ததுடன், அதனை ஒரு நாளில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச் செய்வேன் எனவும் கடிதமூலம் தெரிவித்திருந்தார்.

இதனால் சமாதான நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி எதிராகச் செயற்படுவது சர்வதேசத்துக்கு அம்பலமாகியுள்ளது.

இந்நிலையில் உச்சிமாநாட்டில் தான் கலந்துகொண்டால், உலகத்தலைவர்களின் கேள்விகளுக்கு பதில்சொல்ல முடியாது போய்விடும் என்ற அச்சமே அவரை, அவுஸ்திரேலியா செல்லவிடாமல் தடுத்ததென்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல சர்வதேச அமைப்புக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வரவேற்ற போதும், ஜனாதிபதி அதனை எதிர்த்ததுடன், தனது அதிகாரத்தால் ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்வேன் என்று கடிதமூலம் தெரிவித்திருந்தார். அதனை அவர் அடுத்தநாளே, தான் அவ்வாறு கூறவில்லை என மறுப்புத்தெரிவித்திருந்தார்.

இவ்வாறு மறுப்பு வெளியிட்டமைக்கு சமாதானத்தை குழப்பாது அமைதியாக இருக்கும்படி அவருக்கு சர்வதேச சமூகம் விடுத்த அழுத்தமே காரணமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## பொங்கல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை மண்டாக்குள நாச்சிமார் ஆலய, வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 13 ந் திகதி, நடைபெறவுள்ளது.

அன்றுமாலை 6 மணிமுதல் 14ந்திகதி காலை 7 மணிவரை நடைபெறும் இப்பொங்கல் உற்சவத்தையொட்டி, ஆலயத்தில் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் இசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ)

## அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை

# குழப்புவதில் ஜனாதிபதி முனைப்பு நாடுகளின் அழுத்தத்தால் பின்னடிப்பு

## அமைச்சர் எஸ். பி. சாடல்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசும் விடுதலைப் புலிகளும் செய்துள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தன்னால் செயலற்றதாக்க முடியும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்பு தெரிவித்திருந்தார். ஆனால் அதற்கு நோர்வே, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா முதலிய பல நாடுகள் அழுத்தம் கொடுத்தபடியால் தான் அவ்வாறு கூறவில்லை என்று பின்வாங்கி விட்டார். அவர் அவ்வாறு கூறினார் என்பது எமக்குத் தெரியும்.

இவ்வாறு விவசாயசமுர்த்தி அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா கூறியதாக 'டெயிலி மிரர்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சிகளை எதிர்த்து பிரசாரம் செய்துவரும் ஜே.வி.பிக்கு ஜனாதிபதி இரகசியமான முறையில் ஆதரவு வழங்கி வருகிறார். ஜே. வி. பி. பொறுப்பற்ற முறையில் கண்டபடி பேசிவருவதால் அக் கட்சியினரை வெளிப்படையாக ஆதரிக்க முடியாத நிலையில் அவர் இருக்கிறார்.

எனினும் வேறு வழிகளில் ஜனாதிபதி அவர்களை ஆதரிப்பார் என்று அமைச்சர் திஸநாயக்கா மேலும் கூறியதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (எ)

## வடக்கு-கிழக்கு மாகாண செயலர் அவசர பணிப்புரை

(மானிப்பாய்)

வடக்கு - கிழக்கில் விடுவிக்கப்படாத பகுதிகளிலுள்ள மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பவற்றை புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேலும் 100 நாள்வேலைத் திட்டத்தின் கீழ் கோவில்கள், தேவாலயங்கள், மருத்துவமனைகள் போன்ற பொது இடங்களை சிரமதான மூலம் துப்புரவு செய்யுமாறும்பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபமொன்றும் சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-120)

## வேலை இழப்பைத் தவிர்க்க சுழற்சி முறையில் கடமை

## யாழ். மேயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை வேலைப்பகுதியில் போதிய வேலை இல்லாத காரணத்தால் 115 பேர் வேலையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு சுழற்சி முறையில் வேலைகள் வழங்கப்படுவதோடு வேறு வேலைகளிலும் அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று யாழ். நகர மேயர் செல்லன் கந்தையன் கடந்தமாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

நிதி வசதியில்லாதபடியால் மாநகரசபையின் பொன்விழாக் கொண்டாட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (எ-19)

# 12ஆயிரம் தென்னை நாற்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கமலநல சேவைத் திணைக்களத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் 12 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

நாளை 5 ஆம் திகதி தொடக்கம் 7 திகதி வரை சாவகச்சேரி, கைதடி, கீரிமலை, புலோலி ஆகிய பிரதேசங்களிலும்,

8 ஆம் திகதி தொல்புரத்திலும் இவை விநியோகிக்கப்படவுள்ளன.

கைதடி கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட பிரிவுகளுக்கு 3 ஆயிரம் தென்னங்கன்றுகளும், சாவகச்சேரி பிரிவுக்கு 5 ஆயிரம் தென்னங்கன்றுகளும், விநியோகிக்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்ட பயனாளிகளை அந்தந்தப்பகுதி விவசாய சம்மேளனத்துடன் தொடர்புகொண்டு தென்னம் நாற்றுக்களை பெற்றுக்கொள்ளுமாறு கமலநல சேவைத்திணைக்கள உதவி ஆணையாளர் கே. சுந்தரேசன் கேட்டுள்ளார். (உ-5-19)

## ரத்வத்தையின் புதல்வர்கள் வைத்தியசாலையில் உயர் ரத்த அழுத்தமாம்

(கண்டி)

மடவளையில் 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதன் தொடர்பாக, பிரதான சந்தேகநபர்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ரத்வத்தையின் புதல்வர்களான, லொஹானும் சானுக்கவும் உயர்இரத்த அழுத்தம் காரணமாக போகம்பரை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள வார்ட்டிற்கு வெளியார் செல்வது தடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடுமையான பாதுகாப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போகம்பரை சிறைச்சாலைக்கு முன்பாக பொலிஸ் ரோந்துசேவையும், ஒரு விசேட பொலிஸ் குழுவும் 24 மணி நேரமும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ)

## பாடல் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு, பாட்டுஎழுதுதல் இசையமைத்தல் போட்டிகளை நடத்தவுள்ளது.

பாடல்கள் யாவும் கிறிஸ்தவப் பாடல்களாக இருத்தல் வேண்டும். இசையமைக்கப்படாத பாடல்கள் பல்லவி, சரணம ஆகியவற்றுடனும், இசையமைக்கப்பட்ட பாடல்களாக இருப்பின் அவற்றை ஒலிப்பதிவு நாடாவில் தெளிவாகப்பதிவு செய்தோஅல்லது மேலைத்தேய, கீழைத் தேய இசைக் குறிப்புகளுடனோஅந்தந்தப் பிரிவு பங்குத் தந்தையூடாக இந்தமாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (எ-5-223)

## உதவிப்பணம் வழங்கல்

(மானிப்பாய்)

வலி-தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பவற்றிற்கான உதவிப் பணத்தினைப் பெற்றுக் கொள்பவர்களினதும் மாசி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-120)

## முல்லைத்தீவில் தியான நிகழ்வில் முக்கிய புள்ளிகள்

## சர்வோதயம் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னாபிரிக்க முன்னாள் தலைவர் நெல்சன் மண்டேலா, இலங்கைப் பிரதமர், ரணில்விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகிய மூவரும் ஒன்றாகப் பங்குபற்றும் வகையிலான 16 ஆவது சமாதான தியான வைபவம் ஒன்றை முல்லைத்தீவு நகரில் விரைவில் நடத்த சர்வோதய இயக்கம் திட்டமிட்டுள்ளதாக கொழும்பில் செய்திகள் கசியத் தொடங்கியுள்ளன.

சர்வோதய இயக்கத்தின் 15 ஆவது சமாதான வைபவம் இம்மாதம் 15 ஆம் திகதி அநுராதபுரம் மகமெவுனா பூங்காவில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதிலிருந்தும் ஐந்து இலட்சம் மக்கள் இவ் வைபவத்தில் பங்குபற்றவுள்ளனர்.

இச் சமாதான வைபவத்தில் கலந்துகொள்வதற்கு ஜப்பான், நெதர்லாந்து, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் வருகைதரவுள்ளனர்.

இவ் வைபவத்தில் பங்குகொள்ள ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட முக்கிய அரசியல் தலைவர்களுக்கும், சமாதானம் விரும்பிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. (க-3)

## சேர். வைத்திலிங்கம் துரைசாமி பாடசாலை மாணவர் விடுதி இரு மாதத்துள் கையளிப்பு

## கட்டளைஅதிகாரி தெரிவிப்பு

(ஊர்காவற்றுறை)

வேலணையில் படையினரின் பாவனையில் உள்ள யாழ். சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலய மாணவர்விடுதியையும், வேலணை சைவப்பிரகாச வித்தியாலத்தினையும் இரு மாதங்களுக்குள் நிர்வாகத்திடம் மீளக்கையளிப்பதாக வேலணை கடற்படை கட்டளை அதிகாரி நிஹால் சந்திரசிறி உறுதியளித்துள்ளார்.

செய்தியாளர்களை அண்மையில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இவ்விடங்களிலுள்ள முகாம்களை வேறுஇடத்திற்குநகர்த்துவதுதொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-75,4)

## நெல் உப்பட்டிகளை கால் நடைகள் தின்கின்றன

## விவசாயிகள் கவலை

(கல்வயல்)

வடமராட்சிவல்லைப்பகுதி வயல் நிலங்களில் அறுவடை செய்து வைத்திருக்கும் நெல் உப்பட்டிகளை கட்டாக்காலி மாடுகள் தின்பதாக அப்பகுதி விவசாயிகளினால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வயல் நிலம் ஈரப்பதனாக இருப்பதனால் வெட்டியநெல் கதிர்களை உடனே சூடடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தரப்பில் மேலும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (செ-111)

## இன்று ஒரு தகவல்

# சினத்தாலும் பயனுண்டு

வைகுண்டத்தில் ஒருநாள் இப்படி நான் ஆரம்பித்ததும் 'நீ அங்கு போனாயா? வந்தாயா?' என்றெல்லாம் கேட்கக் கூடாது. புராணக் கதைகள் சில உண்மைகளையும், தத்துவங்களையும் விளக்குவதற்காகவே! அதனால் அவற்றைக் கேட்பதோடு வைத்துக்கொள்ள வேண்டும். நேரில் காட்டு என்று சொல்லி என்னைத் தேடிக்கொண்டு வந்துவிடக் கூடாது. சரி... இப்போது கதைக்கு வருவோம்.

இராவண சம்ஹாரம் பண்ணுவதாக மகாவிஷ்ணு தேவர்களுக்கு வாக்குக் கொடுத்துவிட்டார். எல்லாரையும் போல் வாக்குக் கொடுத்துவிட்டு, பின்னர் அதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்து விட்டார். அவருக்கு என்ன பிரச்சினையென்றால்... பூமியில் வந்து மனிதனாகப் பிறக்கவேண்டுமே... அதற்கு என்ன செய்வது? இப்படி யோசித்துக்கொண்டே அதற்காக ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் விசுவாமித்திரர் விஷ்ணுவைப் பார்க்கிறதற்காக வைகுண்டத்துக்கு வந்து சேர்ந்தார். விசுவாமித்திரர் மிகவும் பெரியவர் அல்லவா? அதனால் விஷ்ணுவும் லட்சுமியும் எழுந்து நின்று அவருக்கு மரியாதை கொடுத்தார்கள். வருகிற விருந்தாளிகளுக்கென்றே ஒரு சிம்மாசனம் போட்டு வைத்திருந்தார்கள். அதைக்காட்டி அதில் உட்காருங்கள் என்று சொன்னார்கள். விசுவாமித்திரர் அந்தச் சிம்மாசனத்துக்குக் கிட்ட உட்காரப் போனார். அந்தச் சமயத்தில் விஷ்ணு அவரைப் பார்த்து... 'பார்த்து உட்காருங்கள்' என்றார். விசுவாமித்திரருக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் அதில் உட்கார்ந்தார். அவ்வளவுதான், அப்படியே அந்தச் சிம்மாசனம் குப்புறக் கவிழ்ந்து விட்டது.

விசுவாமித்திரர் மட்டும் என்ன? உட்கார்ந்து கொண்டா இருப்பார்? அவரும் குப்புறவிழுந்துவிட்டார். முகத்தில் நல்ல அடி! தடவிக் கொண்டே எழுந்திருந்தார். 'நான்தான் பார்த்து உட்காருங்கள் என்று சொன்னேனல்லவா?'' என்றார்விஷ்ணு. விசுவாமித்திரர் யோசித்தார். மறுபடியும் அந்த சிம்மாசனத்தில் உட்கார்ந்தார். மறுபடியும் அது கீழே தள்ளி விட்டு விட்டது. முதல் தடவையாவது கொஞ்சம் லேசான அடி! இந்தத் தடவை கொஞ்சம் பலமாகவே அடி பட்டு விட்டது. விசுவாமித்திரருக்கு கோபம் வர ஆரம்பித்தது. 'நாராயணா! இது என்ன வேடிக்கை? இப்போது உன்னைச் சபிக்கப்போகிறேன் பார்' என்றார். 'நான்தான் பார்த்து உட்காருங்கள் என்று சொன்னேனே' என்றார் அவர். 'சரி... இன்னொரு தடவை ஏறி உட்கார்ந்து பார்ப்போம்' என்று கிட்டப் போனார். முந்தியதடவையை விட இன்னும் வேகமாகக் குப்புறத் தள்ளி விட்டது சிம்மாசனம்.

எத்தனை தடவை முகத்திலேயே அடி வாங்குவார். கோபம் வந்துவிட்டது. விசுவாமித்திரருக்குக் கோபம் வந்துவிட்டதென்றால் சும்மா இருக்குமா? உடனே சாபம் கொடுக்க ஆரம்பித்து விட்டார். உன்னைச் சபித்து விட்டுத்தான் மறுவேலை என்று கையைத் தூக்கினார். 'நீ பூலோகத்தில் போய் மனிதனாகப் பிறக்கக் கடவது' என்று சாபம் கொடுத்து விட்டார். விஷ்ணு இப்படியான ஒரு சாபத்துக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தார். 'உங்களுடைய சாபத்துக்கு மிக்க நன்றி. நான் பூலோகத்தில் பிறப்பதற்கு ஒரு வியாஜம் வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தேன். நான்தான் பார்த்து உட்காருங்கள் -பார்த்து உட்காருங்களென்று படித்துப்படித்துச் சொன்னேனே... நீங்கள் தானே பார்க்கவில்லை. அதோ அங்கே பாருங்கள், என்று சுட்டிக்காட்டினார். விஷ்ணு காட்டிய திசையில் விசுவாமித்திரர் பார்த்தார். அங்கே பார்த்தால்...ஒரு அழகான சிம்மாசனம்! அதில் அரிச்சந்திரமகாராசா உட்கார்ந்திருந்தார். 'சத்தியத்துக்கு முன்னால் அசத்தியம் உட்கார முடியுமா? அரசு-மனை- மகன் எல்லாவற்றையும் இழந்தாற் கூட, ஒரு பொய் சொல்லமாட்டேன் என்றாரே... அதுதான் அவர் இன்றைக்கு வைகுண்டத்தில் இருக்கிறார்' என்றார் விஷ்ணு. உடனே விசுவாமித்திரர் 'நான் செய்த தவறுக்கு என்ன பிராயச்சித்தம்? என்றார்.

'நீங்கள் தான் அரிச்சந்திரனையும், அவர் மனைவியையும் பிரித்து வைத்தீர்கள். அந்தப்பாவம் நீங்குவதற்கு ஒரு வழி சொல்கிறேன். நான் உங்கள சாபப்படி இராமனாகப் பிறக்கிறேன். என்னையும் லட்சுமியையும் சேர்த்து வையுங்கள். பிரித்து வைத்த பாவம் சேர்த்து வைத்தால் சரியாய்விடும்' என்றார். அதனாற்தான் விசுவாமித்திரர் இராமனை அழைத்துக் கொண்டுபோய் சீதையின் கல்யாணத்தைச் செய்து வைக்கிறார். இது பெரியவர் ஒருவர் சொன்ன விபரம், இதிலேயிருந்து நாம் ஒரு விபரத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

விசுவாமித்திரருக்கு விஷ்ணு உண்டாக்கியது போல்... சிலருக்குக் கோபத்தை உண்டாக்கினாலேயே நாம் எதிர்பார்க்கிற பலனை அடைந்திட முடியும், அதில்அனுபவமுள்ள ஒருவர். ஒரு விபரம் சொன்னார். தீபாவளி சமையத்தில் சம்சாரத்தை அழைத்துக் கொண்டு புடவைக் கடைக்குப் போனாராம்! விலை உயர்ந்த புடவைகளாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தாராம் அந்த அம்மா... எல்லாம் ஆயிரம் ரூபாவுக்கு மேல். இவர் பக்கத்தில் நின்று கொண்டு பார்த்து வாங்கு என்று திருப்பித்திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தாராம், அந்த அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது... 'என்ன இது பார்த்து வாங்கு பார்த்துவாங்கு என்று கொண்டு' என்று பல்லைக் கடித்திருக்கிறார். இவர் பொறுமையாக... அதற்கில்லை... அதே கலரில் எனது அம்மாவிடமும் புடவை இருக்கிறது... அதை யோசித்துப் பார்த்து வாங்கு என்று சொன்னேன் என்றார். உடனே அந்த அம்மாவுக்குகோபம் எல்லைமீறிப் போனது. அப்படியென்றால் புடவையேவேண்டாம்வாருங்கள் என்று வீட்டுக்கு வந்து விட்டார்கள் விசுவாமித்திரரின் கோபத்தினால் விஷ்ணு உலகத்துக்கு வந்து சேர்ந்தார். சம்சாரத்தின் கோபத்தினால் நமது ஆள் சௌகரியமாக வீட்டுக்குவந்து சேர்ந்துவிட்டார்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# புரிந்துணர்வுஒப்பந்தத்திற்கு இந்து குருமார் ஒன்றியம் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் பாராட்டி வரவேற்றுள்ளது. இது குறித்து ஒன்றியச் செயலாளர் கா. சந்திரசேகர சர்மாவினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, உலகப் புகழ்பெற்ற ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருப்பது பற்றி இந்து மத குருமாராகிய நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இலங்கைஇனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியின் முன்னோடி நடவடிக்கையாக யுத்த நிறுத்தம், மோதல் தவிர்ப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட புரிந்துணர்வு உடன்பாடு அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எட்டப்பட்டிருப்பது நாட்டுமக்கள் அனைவராலும் வரவேற்கப் படுகிறது.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்கும் அனைத்து இந்துமக்கள் சார்பிலும் குறிப்பாக இந்துக் குருமாரின் சார்பிலும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாழ்க்கையில் அன்றாடப் பிரச்சினைகள் பல தீர்க்கப்பட்டு அவர்கள் சற்று மகிழ்ச்சியோடு வாழும் நிலை இப்போது காணப்படுகிறது என்பதைக் குறிப்பிடும் அதே நேரம், பாவனைப்பொருட்களின் விலையேற்றம் பற்றிய விசனமும் அதற்கானகாரணம் பற்றிய பலவித ஐயப்பாடுகளும் இருப்பதைக் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

தொடர்ந்தும் இம் முயற்சி நல்ல முறையில் வளர வேண்டும் என்றும் தகுந்த முறையிலும் பரஸ்பர புரிந்துணர்வோடும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று நாட்டு மக்கள் அனைவருக்கும் உகந்த, குறிப்பாகத் தமிழ் மக்கள் இதுவரை காலமும் அனுபவித்த துயரங்களுக்கு முடிவாக, நிம்மதியாக வாழத்தக்க ஒரு நிரந்தர தீர்வினைக் கண்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற எமது விருப்பத்தையும் தெரிவித்து தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கும் ஆசிகூறி வாழ்த்துகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## திருடர் இருவர் அகப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பாலாவோடை பகுதி வீடு ஒன்றில் கடந்த செவ்வாய் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் இரண்டு பேரை அப்பகுதி மக்கள் மடக்கிப் பிடித்துசுன்னாகம்பொலிஸில் ஒப்படைத்தனர்.

பாலா வோடையில் உள்ள வீடு ஒன்றினுள் 7 பேர் கொண்ட திருடர்கோஷ்டியொன்று கடந்த செவ்வாய் இரவு திருட்டில் ஈடுபட்ட வேளைஇரண்டு அடையாள அட்டைகளை திருடர்கள் அந்த வீட்டில் தவறவிட்டு சென்றுள்ளனர்.

அடுத்த நாட்காலை வேறு விடயம் போல் பாசாங்கு காட்டி அங்கு வந்த 7 பேரையும் இனம் கண்டு கொண்ட அயலவர்கள் இருவரைமடக்கிப் பிடித்தனர்.

ஏனையோர் தப்பியோடியுள்ளனர். (உ-5)

## நாளை முதல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் நாடக அரங்கியற் கண்காட்சி நாளை 5 ஆம் திகதி தொடக்கம் 7 ம் திகதிவரை தினமும் காலை 9.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை யாழ். பிரதான வீதியில் உள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது. (க-3)

## பொதுநலவாய நாடுகளின் 4 நாள் உச்சி மாநாடு நேற்று ஆஸியில் ஆரம்பம்

(கொழும்பு)

பொதுநல வாய அமைப்பின் நான்கு நாள் உச்சி மாநாடு அவுஸ்ரேலியாவின் கூலம் நகரில் பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணி தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

உலகிலிருந்து வறுமையை ஒழித்துக் கட்டி, சிறுவர்களின் எதிர்கால வாழ்வின் தரத்தை உயர்த்துவதற்காக பாடுபட வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஆரம்பமான இம் மாநாட்டில் 35 நாட்டுத்தலைவர்கள் உட்பட 51 தூதுக் குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

பல்வேறு வழிகளிலும் வளர்ந்துவரும் இன்றைய உலகில் காலத்தின் தேவைக்கேற்ப ஏற்படும் மாற்றங்களைச் சந்திக்கவும், சவால்களை எதிர் கொள்ளவும் வளர்முக நாடுகள் தயாராக இருக்க வேண்டும் என மகாராணியார் தனது தலைமை உரையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களைக் கோட்டுக்கொண்டார்.

பொதுநல வாய அமைப்பின் செயலாளர் நாயகம் டோண்மக்னன், பொது நலவாய அமைப்பு நாடுகளில் அனேகமானவைதமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், சுதந்திரத்திற்காகவும் போராட்டம் நடத்திவருகின்றனஎனச்சுட்டிக்காட்டினார். (உ-8)

## யாழ். கல்லுண்டாய் கடற்கரையில்

# தொடரும் சட்ட விரோத மண் அகழ்வு கடற்றொழிலாளர் கடும் விசனம்

(மானிப்பாய்)

யாழ். கல்லுண்டாய் கடற்கரைப் பிரதேசத்தில் உழவு இயந்திரங்கள் மூலம் சட்ட விரோதமாக மண் ஏற்றிச் செல்வதால் அப்பிரதேசத்திற்குச் செல்லும் பாதை பாரிய கிடங்குகள் ஏற்பட்டு மிகவும் சீர் கெட்ட நிலையில் உள்ளதால் கடற்றொழிலாளர்கள் தமது தொழிலைச் செய்யச் செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; நீண்ட காலமாக காக்கைதீவு கரையாம்பிட்டி இறங்குதுறையூடாக தமது தொழிலை செய்து வந்த நூற்றுக் கணக்கானதொழிலாளர்கள்கடந்த காலஅனர்த்தங்கள் காரணமாக அப்பகுதிக்கு செல்லமுடியாமையினால், அங்கிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியிலிருந்து புதிய பாதையொன்றினை அமைத்து அதனூடாகவே சென்று தமது தொழிலைச் செய்து வருகின்றனர்.

தற்போதுஅப்பாதையூடாக உழவு இயந்திரங்கள் சென்று தினமும் மணல் ஏற்றி வருவதனால் அப்பாதை சீர்கெட்டு போக்கு வரத்துச்செய்ய முடியாத நிலைஏற்பட்டுள்ளதால் தமது அன்றாட தொழிலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாம்.

இதுவிடயத் தில்சம்பந்தப்பட்டவர்கள் தகுந்தநடவடிக்கை எடுக்க முன்வர மாட்டார்களாவென இவர்கள்கேட்கின்றனர். (க- 120)

## பல்கலையில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். வந்துள்ள தென்பகுதிப் பல்கலைக்கழக மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் புகைப்படக் கண்காட்சி ஒன்றினை நடத்தி வருகின்றனர்.

தென்னிலங்கைச் சமய, சமூக நிகழ்வுகள் மற்றும்காட்சிப் படங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. (உ-124)

## சிந்தனைக்கு விருந்து

**அமைதி மாளிகை எழுவது என்றோ?**

மோதலை அரசும் மானப், புலிகளும் தவிர்த்து நாட்டில்
சாதல்கள் ஊனமாதல், சஞ்சலித்தகதி ஆதல்
வேதனை அவலம் போக்க, அடித்தளம் சமைத்த
போதும்
தீதிலா அமைதி என்ற, மாளிகை சமைத்தல் என்றோ?

'பழையவன்'

# குஜராத் ரயில் தீவைப்புச் சம்பவம் பாக். உளவு அமைப்பே காரணம்

## உயர்மட்ட தகவல்கள் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கடந்த 27 ஆம் திகதி சபர்மதி விரைவு ரயிலுக்கு தீவைக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டுபேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்ஜித மற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்தேகத்திற்கிடமான இரண்டு குழுக்களுக்கிடையிலான உரையாடலை இரகசிய தொடர்புசாதனம் மூலம் ஒற்றுக் கேட்ட விசேட புலனாய்வு பொலிஸார் இவ் விருவரையும்கைதுசெய்துள்ளனர்என்று அச்செய்தி தெரிவிக்கிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது; பாழடைந்த மண்டபம் ஒன்றிலிருந்து குழு ஒன்று இன்னொரு குழுவுடன் சம்பவம் தொடர்பாக பேசியதாகவும் அவர்களின் முயற்சி வெற்றி அடைந்துள்ளதாகவும் பேசியுள்ளனர்.

அவர்கள் பேசியதாவது, வகுப்பு இனவாதத்தை தூண்டும் விதத்தில் நாம் மேற்கொண்ட செயல் வெற்றியளித்துள்ளதாகவும் தாம் எதிர்பார்த்ததை விட அதிகமானோர் இன வெறியால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் பேசியுள்ளனர்.

இதே வேளை; சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரை கைது செய்துள்ளதாகவும் அவர்களை விசாரித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களின் ஆரம்ப விசாரணையில், சமூக பதற்றத்தை தூண்டும் நோக்கோடு செயற்படும் பாகிஸ்தானின் உளவு விசாரணை அமைப்பான ஐ. எஸ். ஏ அமைப்பினரே இத் தாக்குதலை புரிந்திருக்கிறார்கள் என்று உயர் மட்ட தகவல்கள் தெரிவிப்பதாக அச் செய்தி தெரிவிக்கிறது.

(க-07)

# போதைவஸ்து கடத்தல் தந்தையும் மகளும் கைது

## தெஹ்ரானில் சம்பவம்

(தெஹ்ரான்)

ஈரான் விமான நிலையத்தில் பேனாவுக்குள் போதைப் பொருள் கடத்திய தந்தையையும், மகளையும் ஈரான் விமானநிலைய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போன்ற சக்திவாய்ந்த போதைப் பொருளைபேனைகளுக்குள் திரவமாக நிரப்பி வெளிநாடு ஒன்றுக்கு எடுத்துச் செல்ல முற்பட்ட போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது;

ஆப்கானிஸ்தானை சேர்ந்த தந்தை-மகள் இருவரும் அதிகமான பேனைகளை எடுத்துச் சென்றவேளை அதில் ஒன்றைஅதிகாரிஒருவர் கேட்டதை அடுத்து, அவற்றை கொடுக்க இருவரும் மறுத்துள்ளனர். அதிகாரி பேனா ஒன்றைஎடுத்துஎழுதிபார்த்த போது அது வித்தியாசமாக இருப்பதைக்கண்டு பரிசோதித்த வேளைஅதில்போதைப் பொருள் திரவம் செலுத்தப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் இருவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

(க-07)

# உலக தரிசனம்

இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள

## பிரதமர் வாஜ்பாய் ஆந்திராவுக்கு விஜயம்

(புதுடில்லி)

ஹெலி விபத்தில் பலியான மக்களவை சபாநாயகர் ஜி. எம்.பாலயோகியின் இறுதி அஞ்சலிக்காக பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் உட்பட அரசியல் தலைவர்கள் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் நேற்று பிற்பகல் ஆந்திரப்பிரதேசம் சென்றுள்ளனர்.

சபாநாயகரின் உடலுக்கு மலர் தூவி அஞ்சலிசெலுத்திய நாட்டுத்தலைவர்கள் அவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறியுள்ளனர்.

இதேவேளை சபாநாயகரின் இழப்புக் குறித்து அனுதாபம் தெரிவித்த உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி பாலயோகி சிறந்த பேச்சாளர் என்றும் அவை நடவடிக்கைகளில் நிதானமானவர் என்றும் தெரிவித்தார்.

(க-7)

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய கொக்கி அணி தலைமை கைமாறியது

(புதுடில்லி)

இந்திய கொக்கி அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியில்இருந்து பெட்றிக் டிசோசா நீக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான அறிவித்தலை இந்திய கொக்கி சம்மேளனத்தலைவர் கே. பி. எவ். கில் விடுத்துள்ளார்.

இதேவேளை, மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடைபெறும் உலககிண்ண கொக்கிப் போட்டியில்கலந்து கொள்ளும் அணிக்கு சீ. ஆர். குமாரை தலைமைப் பதவியை ஏற்குமாறு சம்மேளனம் கேட்டுள்ளது.

(உ-5)

## வலைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் நாளை பி. ப. 1.30 மணிக்கு 15, 17, 19 வயதுப் பிரிவுகளில் 3 ஆம் இடத்திற்கான இறுதிப்போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(க-3)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவை முன்னிட்டு நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பி. ப. 4.30 மணிக்கு தென்றல் வி.க எதிர் கலைவாணி வி.க. ஆகியன மோதவுள்ளன.

(க-3)

# இந்தோனேஷியாவிலும் வன்முறைகள் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளது

## மக்கள் மத்தியில் பீதி

(ஜகார்த்தா)

குஜராத்தில் இடம் பெற்று வரும் இந்து-முஸ்லிம் வன்முறைகளைத் தொடர்ந்து முஸ்லிம் நாடான இந்தோனேஷியாவிலும் வன்முறைகள் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

இதன்விளைவாகஇந்தோனேஷியாவின் தலைநகர்ஜகார்த்தாவில் உள்ள இந்துக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இருதரப்பு மக்களையும் தங்கள் இனமத நிகழ்வுகளை ஆடம்பரமற்றதாகவும், வரையறுக்கப்பட்ட மக்களைக் கொண்டதாகவும் நடத்துமாறு பொலிஸ் அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

இதேவேளை,பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள இந்துக்களுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் பங்களாதேஷ் நகரிலும் பாதுகாப்புதீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

(செ-7)

# ஆப்கானில் மீண்டும் யுத்தம் காபூல்செய்திகள் தெரிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அல் கெய்டா போராளிகளிற்கும் அமெரிக்க இராணுவத்தினருக்கும் இடையே மீண்டும் போர் ஆரம்பித்துள்ளதாக காபூல் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு மற்றும் தென் கிழக்குப் பகுதியில் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா போராளிகள் 500 இற்கும் மேற்பட்டோர் தமது குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள் என்ற புலனாய்வுத் தகவல் கிடைத்ததைஅடுத்தே மீண்டும் போர்வெடித்துள்ளதாகஅமெரிக்கத்தரப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் தனியார் படைகளின் மூத்த தளபதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் அமெரிக்க விமானப்படைகள் றொக்கட் குண்டுகளை வீசி தாக்குதல்கள் மேற்கொண்டன. எனினும் அல்கெய்டா போராளிகள்சுமார்600பேர்கனரக ஆயுதங்கள் சகிதம் போரில் ஈடுபட்டுவருகிறார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-8)

# இந்திய சபாநாயகரின் மரணம் குறித்து சர்ச்சை

(புதுடில்லி)

மக்களவை இந்திய சபாநாயகர் ஜி. எம். சி. பாலயோகி சென்ற ஹெலி விபத்துக்குள்ளானதா? அல்லது திட்டமிட்டு செய்யப்பட்ட சதியா? என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இடம்பெற்று வரும் சுமார் 290 பேரை பலிகொண்ட கொடுமையான வன்முறையின் மத்தியில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதே இச்சர்ச்சைக்கு காரணமாக உள்ளது.

வன்முறையால் பெரிதும் பாதிக்கப்பட்ட குழு ஒன்றே இதனை திட்டமிட்டு செய்துள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இருந்தபோதிலும் வன்முறைகளைத் தொடர்ந்து அரச தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும், மற்றும் பாராளுமன்றம் உட்பட அரச கூட்டங்களுக்குகடும் பொலிஸ் காவல் வைக்கப்பட்டநிலையிலும் இவ்விபத்து இடம்பெற்றது ஆராயப்பட வேண்டியதுஎன, பெயர்சொல்ல விரும்பாத இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை,இதுஒருதிட்டமிட்ட சதிஅல்ல வெறும் விபத்தே என்று ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

பொலிஸ் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதுடன் அரச அதிகாரிகளுக்கான பாதுகாப்பையும் தீவிரப்படுத்தியுள்ளதாக அரசதரப்பு செய்திகள் தெரிவித்தன.

(க-07)

# இரண்டு இருதயங்களுடன் வாழும் பிறேசில் நபர்

## இப்படியும் அதிசயம்

(சாவோபவுலோ)

ஹொரர்சியோ என்ற நபருக்கு பிறேசிலில் மேற் கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின் பின்பு இரண்டு இயங்கும் இதயங்கள் இருப்பதாக பிறேசிலிய மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

இவருக்கு இருதய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போதுஇரத்தத்தைவிநியோகிக்கும் புதிய குழாய் ஒன்று பொருத்தப்பட்டது. இதன் போதே அவருக்கு இரண்டு இதயங்கள் இருப்பதாக மருத்துவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-03)

# கடையில் திருட்டு

(கல்வியங்காடு)

பலசரக்குக் கடையொன்றினுள் புகுந்த திருடர்கள் அரிசி மூடைகள், செத்தல்மிளகாய், பால்மா வகைகள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

நல்லூர் கோவில் வீதி முடமாவடியிலுள்ள கணபதிப்பிள்ளை இரவீந்திரன் என்பவருக்குச் சொந்தமான பலசரக்குக் கடையிலேயே இத் திருட்டு நடந்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இத்திருட்டில் 35 ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதிவாய்ந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் குறித்து கடை உரிமையாளர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(எ-30)

# மறைந்த சபாநாயகருக்கு பலர் அனுதாபம் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய மக்களவை சபாநாயகர்ஜி.எம்.சி.பாலயோகி நேற்றுக்காலை ஹெலி விபத்தொன்றில் காலமானார். இவரது மறைவு குறித்து உலகத் தலைவர்கள் பலரும்அனுதாபம் வெளியிட்டுள்ளனர்.

1951 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதி பிறந்த இவர் விசாகபட்டினம் கல்லூரியில் கற்றுபிரபல வழக்கறிஞராகவும் தொழிற்சங்க உறுப்பினராகவும் பணியாற்றினார்.

தொடர்ந்து அரசியலில் நுழைந்த பாலயோகி அமலாபுரம் தனித்தொகுதியில் இருந்து 13 ஆவது மக்கள் அவைக்கு தெரிவு செய்யப்பட்டார். 1987 இல் கிழக்கு கோதாவரி மாவட்ட பரிஷத்தின் தலைவராகதேர்ந்தெடுக்கப்பட்டார்.

முதல் தடவையாக 1991ல் 10 ஆவது மக்களவையிலும் பின்னர் 1996 ல் ஆந்திரப்பிரதேச சட்டப்பேரவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1998-1999 ஆம் ஆண்டுகளில் மக்களவையின் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டு இறக்கும் வரை பணியாற்றி வந்தார்.

படிப்படியாக முன்னேறிய இவரது மரணம் குறித்து அரசியல் தலைவர்கள் பலரும் இரங்கல் செய்திகளை விடுத்த வண்ணம் உள்ளனர்.

(க-7)

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு

- குறள்

வலம்புரி

## தொலைபேசி வருகிறது!

யாழ். குடாநாட்டிற்கு மேலும் ஆயிரம் தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கான கருவிகள் யாழ். தொலைத் தொடர்பு நிலையத்திற்கு கிடைத்துள்ளது.

இதில் தேவையான கருவிகள் முழுமையாக கிடைத்துள்ளதா என்பது கேள்வி. எதுவானாலும் வருடக் கணக்கில் தொலைபேசி இணைப்புக்காக விண்ணப்பித்து விட்டு அலைந்து திரியும் மக்களின் நிலையை உணர்ந்து வழங்கப்படுகின்ற இணைப்புகளை ஊழல் அற்ற முறையில்- விண்ணப்பித்தஒழுங்கில் குறித்த சில நபர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்புகளை வழங்காதவாறு பகிர்ந்து கொள்வதற்கு நிறுவன உயர் அதிகாரி(கள்) முன்வர வேண்டும்.

கடந்தகாலங்களில் யாழ். தொலைத்தொடர்பு நிலையத்தில் தொலைபேசி இணைப்பு வழங்குவதில் நடந்த ஊழல் தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது கூறப்பட்ட ஊழலை விடப் பெரிது. இவை ஏதோ ஒரு வழியில் மழுங்கிப் போயினும் நடந்த ஊழல் வெளியில் தெரியவில்லை என உயர் அதிகாரி(கள்) எண்ணியிருப்பார்களாயின் அஃது அவர்களின் அறியாமையையே பிரதிபலிக்கும்.

ஆயிரக்கணக்கானோர் தொலைபேசி இணைப்புக்காக விண்ணப்பித்திருந்த போதிலும் ஒரு சிலருக்கு மட்டும் உறவின் பேரால் - கையூட்டின் களிப்பால் பத்துக்கு மேற்பட்ட இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அதனைப் பெற்றவர்கள் தற்போது அவ் இணைப்புகளை ஒரு லட்சம் ரூபாவிற்கு மேல் பேரம் பேசி விற்பனை செய்துமுள்ளனர்.

(இச் சம்பவம் பருத்தித்துறையில்நடந்துள்ளது.)

எனவே கடந்த காலங்களில் நடந்தஊழல்களை விசாரிக்க முற்பட்டால் ரெலிக்கொம் உயர் அதிகாரிகள் சிலர் ''தேசத்துரோகம்'' என்ற பட்டியலுக்குள் இடம் பெறுவர்.

ஆகவே தற்போதைய சூழ்நிலையில் அதனை விடுத்து இனி மேலாவது வழங்கப்போகும்இணைப்புகளில் நீதியை நேர்மையை அதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே பொது மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# குறுக்குவழியில் பொருள்சேர்க்க எண்ணாது இயன்ற தொழில் முயன்று செய்து வாழ்வோம்

பேராசையுடையோர் இனி வரும் பயனை விரும்பி இப்போது உள்ளதையும் இழக்கின்றார். பேராசை கிலேசத்தையே விளைவிக்கும். பேராசையுடையோருக்கு ஒரு பொழுதும் திருப்தி பிறவாது. உள்ளது போதும் என்று அமைந்தமனமே குறைவற்ற களஞ்சியம் எத்துணைப் பெருஞ் செல்வராயினும், திருப்தியில்லாதவர் ஒரு பொழுதும்சுகமடையார். இத்தேசங்களிலே அநேகர் பேரராசைகொண்டு இரசவாதத்தினாலேபெரும் பொருள் சம்பாதிக்கலாம் என்றுதுணிந்து, பொய் வேடம் பூண்டவர்களாலே வஞ்சிக்கப்பட்டு, தங்களிடத்து முன்னுள்ள பொருளையும் இழந்து வறுமையுற்று வருகின்றார்கள்.

### குச்சக முனிவர் காலம்

சூரன் என்னும் ஓரரசன் தவவலிமையினாலே, ஆயிரத்தெட்டண்டங்களை நூற்றெட்டு யுகம் அரசாண்டான் என்று கந்தபுராணத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சூரன் தவஞ் செய்யப் புகுதற்கு முன்னரே அவனுடைய பிதாவாகியகாசிபமுனிவர். அவனுக்கு மார்க்கண்டேய முனிவர் கடவுட் பூஜை செய்து எமனை வென்ற சரித்திரத்தைச் சொல்லினார். அம்மார்க்கண்டேய முனிவருடையசரித்திரம் சூரன் பிறக்க எண்ணில்லாத காலத்துக்கு முன்னே நடந்தது. அம்மார்க்கண்டேயமுனிவருடையபிதா மிருகண்டு முனிவர், அவர் பிதா மிருகண்டூய முனிவர். அவர் பிதா குச்சக முனிவர், அக் குச்சக முனிவர் காலத்திலே ஒருவன் இரசவாதத்தினாலே பெரும் பொருள் சம்பாதிக்க விரும்பி, தன்னிடத்துள்ள பொருளையும்இழந்து, தான் செய்த தருமங்களையும் இழந்த சரித்திரத்தைச் சொல்வாம்.

கலிங்க நாட்டிலே அரிபுரத்திலே வணிகர் குலத்திலே தேவதத்தன் என்றொருவன் இருந்தான். அவனுடைய புதல்வனாகிய தரும தத்தன் மிக்க செல்வத்தை யுடையவனாய், தருமங்களைச் செய்து பெரும் புகழ் பெற்றான். அவன் தன்னுடைய தந்தையும், தாயும் இறத்தலும், தமியனாகித் துயருழந்து, பின் ஒருவாறு தேறியிருக்கும் பொழுது; ஓரிரசவாதி முண்டிதமாகிய சிரசையும், குண்டலம் பொருந்திய காதையும், விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்த நெற்றியையும், உருத்திராக்ஷ மாலையையும், பிரம்பு பொருந்திய கையையும் உடையவனாய் அவனிடத்து வந்தான், தருமதத்தன் அவ்விரசவாதியைக் கண்டு வணங்கி, தன் வீட்டினுள் அழைத்துக் கொண்டு சென்று அமுது செய்வித்து, முகமன் கூறி, பின்பு அவனை நோக்கி ''சுவாமி, நீர் இங்கு வந்ததென்னை'' என்றான், வாதி அதுகேட்டு நம்மிடத்து ஒரு வித்தை உளது. அது எவருக்கும் பேசுந்தன்மையதன்று, குருபக்தி உடையோருக்கு மாத்திரம் சொல்லத்தக்கது, நெஞ்சில் சிறிதும் மாசில்லாத உனக்கு நாம் அதனைச்சொல்வோம்.'

வந்து, அவன் முன்பு வைத்தான். வாதி அவற்றை நோக்கி, ''ஓகோ! வணிகரின் திலகனாகிய உன்னிடத்துள்ள செல்வம் இது தானோ? கை தட்டிச் சிரித்து, இப்பொருள் நம் வித்தையில் இறைக்கும் போதாது, இது நாம் உருக்கு முகத்திலே சிந்துகின்ற அளவுங் காணாது நீ நமக்குப் பின்னே திரிவாயாயின், அளப்பில்லாத பொருள் தருவோம், இதனை வைத்துக் கொள்வாயாக'' என்றான். அப்பொழுது தருமதத்தன் ''சுவாமிகோபிக்கவேண்டா, நீ வேண்டிய பெரு நிதி முழுதும் தேடிக் கொண்டு வருவேன் இரும்'' என்று சொல்லிக் கொண்டு போய், வஸ்திரங்களையும், நிலங்களையும், இரத்தினங்களையும், ஆபரணங்களையும், வீடுகளையும், ஆடு மாடுகளையும்,

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

### இரசவாதம்

'இரசத்தினாலே வேண்டிய பொன்னைச் செய்வோம். காரிரும்பை நாகமாக்குவோம், மீட்டும் அதனைப் பொன்னாக்குவோம், ஈயத்தையும், இரசத்தையும் வெள்ளியாக்குவோம், வங்கத்தைப் பொன்னாக்குவோம், இரும்பிற் செம்புண்டாக்குவோம், ஈயத்தையும் அப்படியே செய்வோம். நமது வன்மையை உள்ள படி சொல்ல விரும்பினோமாயின் அளப்பில்லாத வருடங்கள் வேண்டும், ஒரு பொன்னைக் கோடி பொன்னாக்குவோம் கோடி பொன்னை மலை போல கோடி பொன்னாக்குவோம். உன் பொருள் அனைத்தையும் தருவாயாயின், உன் வீட்டிலே அப்பொருளை வைத்தற்கு இடமில்லை யென்னும்படி செய்வோம்'' என்றான்.

இப்படிச் சொல்லிய வாதியைத் தருமதத்தன் வணங்கி முன்னேதன்னிடத்துள்ள நிதியையும், பின்னே தன்னாலே சம்பாதிக்கப்பட்ட நிதியையும், பேடகங்களிலுள்ள ஆபரணங்களையும் கொண்டு விற்று மதிமயக்கத்தினாலே தருமத்தையும் விற்றான்.

### வாதிமுன் தேடிய பெருநிதி

இவ்வாறு தேடிய பெருநிதியனைத்தையும்கொண்டுவந்து வாதிமுன் வைத்து நிற்றலும், வாதி மனமகிழ்ந்து, அவையெல்லாவற்றையும் அக்கினியிலே உருக்கித்திரட்டி, ஒருருவாக்கி, அதனிரட்டி எடைகொண்ட இரசத்தை அம்மியிலிட்டு, அப்பொன் முழுதையும்உரைத்துஅதனைஉருட்டி, மட்குகையினுள்ளே மருந்தை உள்ளூறுத்திப் பொன்னை உள்ளிட்டு, அதனிடத்தே ஒரு களங்கத்தைஇட்டு, சீலைமண் செய்து, அக்கினியிலே நூற்றெட்டுக் குடபுடமிட்டு, அதனைப்பார்த்து 'மிகவும் மாற்று வந்தது; இனி ஒருவராகியிலே பழுக்கும். காற்றில்லாத ஒருறையுள் காட்டு, என்றான். தருமதத்தன் ஒருறையுளைக் காட்டலும் இரசவாதி அதனுள்ளே போய், விறகின் மீது சுடலையக்கினிகொண்டு வராகு மேலிட்டும் புகைப்பித்தான். அதனாலே தருமத்தத்தன்கண்ணீர் பொழிய, சரீரம் வெதும்ப, எங்கும் வேர்ப்ப, ஊமைபோல் ஒன்றும் பேசாமலும் போகமுயலாமலும் சும்மாவிருந்தான். அப்பொழுது இரசவாதி பொற்குகையை எடுத்து, மெல்லெனத் தனது வஸ்திரத்தினுள்ளே மறைத்துக்கொண்டு அதுபோலத்தன்னிடத்திருந்த வேறொரு குகையைப்பக்கத்து வைத்து, புகையைத்தணித்து, தருமதத்தனை நோக்கி, 'இக்குகையை உன்கையினால் எடுத்து, இவ்வக்கினிமேல் வைப்பாயாக!, என்றான். தருமதத்தன் அப்படிச்செய்தலும்.

இரசவாதி அதற்குரியன யாவற்றையும் அமைத்துச் சேமம் செய்து, தருமதத்தனை நோக்கி' நீ உணவில்லாமலும், ஒருவரோடும் பேசாமலும், பிறரைப் பாராமலும் மூன்று நாள் நம்மையே சிந்தித்துக் கொண்டிருக்கக் கடவாய், நாம் காளி சந்நிதியிலே ஒரு யாகம் முடித்தல் வேண்டும். முடித்துக் கொண்டு நாலாம் நாள் இங்கே வருவோம்' என்றான். தருமதத்தன் அப்படியே செய்க என்றுசொல்லி அவனை மும்முறை வணங்கி, அவன் பின் செல்லாது நின்றான்.

### துயரத்தால் இறந்தான்

இரசவாதி அங்கு நின்று விரைந்து நெடுந்தூரம்போய், உருமாறி வேறோரிடத்தை அடைந்தான். தருமதத்தன் இரசவாதிவிதிப்படியேஇருந்து மூன்று நாள் செல்லலும், பெரியவர் சொல்லிய நாளெல்லை சென்றுவிட்டதே இன்று வந்திலர், அவர்சொற்றப்புவாரா? என்று தளர்ந்து, காளிகோயிலினும், நகரத்தினும் அவனைத் தேடிக் காணாது மயங்கி வாடி, வீட்டுக்குத் திரும்பினான். முன் வைத்த குகையை எடுத்துப் பார்த்து, அது இரும்பாய் இருக்கக் கண்டு, மிகுந்த துயரமடைந்து வீழ்ந்திறந்தான், அவன் தருமத்தைவிற்றபாவத்தினாலே யானையாய்ப் பிறந்தான்.

கடவுட்பூஜைசெய்துஎமனை வென்றபுண்ணியயுகத்தினும, இரசவாதத்தினாலே பொருள் சம்பாதித்தல் இயலாதிருக்க நம்மவர்கள் அநேகர் இப்பாவயுகத்தில் இரசவாதத்தினால் பொருள் சம்பாதிக்கலாம் என்று மயங்கி அலைவதுஎன்ன பேதமையோ அறியேம். இரசவாத மயக்கத்தினாலே உள்ள பொருளையும் இழந்து வீண் காலம் போக்காமல் தங்கள் தங்களால் இயன்ற தொழில்

(02ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## மதிப்பிடுதல்

வாக்கால் மனத்தால்
மதிப்பிரியாய்! நின்னருளை
நோக்காமல் நோக்கி நிற்கும்
நுண்ணறிவு காண்பேனோ?

- தாயுமானவர்

உயர்ந்ததாகக் கருதும் ஒன்றைஉலகம் நாடுகிறது. என் உயிருக்குயிராகிய பெருந்தகையே, எல்லாவற்றிலும் பெரியதாக உன்னை நான் மதிப்பிடும் பான்மையை எனக்கு நீ நல்குவாயாக.

மனதில் எண்ணிப் பார்த்து மனிதன் கொடுக்கும் மதிப்புக்கும், வேகத்துக்கும் ஏற்றவாறே வெளியுலகில் நிகழும் வேலைகள் விரைவு பெறுகின்றன. இன்ப துன்பங்களை உண்டுபண்ணும் நிகழ்ச்சிகளும் பொருள்களும் வெளியுலகில் இல்லை. மனது உண்டுபண்ணுகிற இன்ப துன்பம் வெளியுலகில் இருப்பவை போன்று தென்படுகின்றன. மனது கொடுக்கிற மதிப்புக்குமேல் புறவுலகுக்கு மதிப்பில்லை.

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (20)

**தவக்காலம் - மூன்றாம் வாரம் (ஊதா)**

**திபா 42:2,3 43:3,4. 'என்நெஞ்சம் கடவுள் மீது, உயிருள்ள இறைவன் மீது தாகம் கொண்டுள்ளது.'**

தன் சொந்த ஊரில் இயேசுவால் புதுமைகள் செய்ய முடியவில்லை ஏன்? இறைவாக்கினரைக் கடவுளின் மனிதர்களாகப் புறவினத்தார் ஏற்றனர். சொந்த மக்கள் ஏற்கத் தயங்கினர். இயேசுவை சூசையின் மகனாக, மரியாளின் மைந்தனாக அறிந்த மக்கள், அவரைக் கடவுளின் மகனாக, இறையாட்சியின் நாயகனாக ஏற்க மறுக்கின்றனர். நம்பிக்கையில்லாத இடத்தில் இறைவன் செயல்படுவதில்லை. நம்மிடையே உள்ளவர்களில் இறைவனின் செயல்பாட்டை உணர்ந்து ஏற்கிறோமா? அவர்களுடன் இணைந்து செயல்படுவோமா?

- காவலன்

கஸ்தூரி
சீயாக்காய் பவுடர்

Anna Industrey
Inuvil

ஒப்பந்தம் கைச்சாத்தாகி

# 90 வது நாளில் இருந்து புலிகள் எவரும் எங்கும் நடமாடலாம்!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 90 வது நாளிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் எத்தனை விடுதலைப்புலி உறுப்பினர்களும் நடமாடலாம் என அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலி உறுப்பினர்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிப்பது ஊடுருவலாக கணிக்கப்படலாமா? என கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் பீரிஸ் மேலும் கருத்துக் கூறுகையில், அரசுக்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் கைச்சாத்தாகி 30 நாட்களுக்குள் புலிகள் எவரும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனால் 30 வது நாளில் 50 பேரும், 60வது நாளில் 100 பேரும், 90வது நாளிலிருந்து சுதந்திரமான முறையில் எத்தனை பேரும் புலிகள் தரப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்கப்படுவர் என்று தெரிவித்தார். (ந)

---

### கொழும்பு...

யாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர் சாதாரண பஸ் உரிமையாளர்களுக்கும் இலங்கைப் போக்கு வரத்து சபை பஸ்களுக்கும் அனுமதி வழங்கப்படும் எனவும் வீதிப் போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிளிநொச்சியில் இருந்து பரந்தன் வரைக்கும் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு விட்டதாவும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக் கப்பட்ட பின் இந்த பஸ் சேவை நடத்தப்படும் எனவும் ஒரு வழிக் கட்டணமாக ரூபா. 400 அறவிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

---

## கிளிநொச்சி - முல்லைத்தீவை பிரதமர் "பிரபா" விடம் ஒப்படைத்து விட்டார்!

### மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை பொதுஜன ஐக்கிய முன்னணி வன்மையாக எதிர்க்கிறதென முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மங்கள சமரவீர மேலும் தெரிவித்திருப்பதாவது,

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு பதவியில் இருந்த போது வழங்கிய 3 சதவீதமான அம்சங்கள்தான் இப்போது இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் இடம் பெற்றுள்ளது.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்ட வல்லுனர்கள் இப்போது ஆதரவளித்து வருகிறார்கள். இந்த உடன்படிக்கையில், தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகள் தொடர்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில் அப்பகுதிகள் இரண்டையும் ரணில் விக்கிரமசிங்கா பிரபாகரனிடம் ஒப்படைத்துவிட்டார். (வ)

---

### பாதுகாப்பு.......

இதற்கு முன்னதாக விமானமமூலம் பலாலி விமானப்படைத் தளத்தில் வந்திறங்கிய அமைச்சர் மாரப்பன அங்கு தளபதிகளுடன் கலந்துரையாடிவிட்டு காங்கேசன் துறை துறைமுகத்துக்குச் சென்று அங்குள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தார். இதனையடுத்து பருத்தித் துறை 524 வது படைப்பிரிவுக்குச் சென்ற அமைச்சர் அங்கு அதிகாரி களுடன் தற்போதைய பாதுகாப்பு நிலைமை குறித்து ஆராய்து விட்டு நாகர்கோவில்,எழுதுமட்டு வாள் முன்னரங்கப் பகுதிக்குச் சென்று பாதை திறப்பது குறித்து படை அதிகாரிகளுடன் கருத்துப் பரிமாறியுள்ளார்.

இதேவேளை எழுதுமட்டு வாள்-கண்டி வீதியைத் திறப்பதில் படைத்தரப்பு பின்னடிப்ப தாகவும், இதற்கு மாற்றீடாக வடமராட்சி கிழக்கில் இருந்து நாகர்கோவில்-மருதங்கேணி-புதுக்காட்டுச்சந்தி-ஆனையிறவு ஊடான பாதையைத் திறப்பது குறித்து படையதிகாரிகள் அமைச்சர்மாரப்பனவுக்கு ஆலோசனை கூறியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ-23)

---

### சபாநாயகர்...

இரண்டு நாள் துக்கதினத்தை அனுஷ்டிக்கவுள்ளது. அவரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும்.

பிற்பட்ட இனத்தில் பிறந்த பாலபோதி 13வது, 14வது மக்களவையில் தலைவராக இருந்தவர் என்பதும், நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்தை பேணிக்காப்பதில் முதன்மையானவராக விளங்கியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஹெலி விபத்துக்கானகாரணம் குறித்து விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. (ந)

சிக்கனமான சலவைக்கு
மில்க்வைற் பவர் சோப்
பாவியுங்கள்
மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

A/L - 2004
கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல்
வகுப்புக்கள் ஆரம்பம்
09.03.2002
காலை 07.00 மணி
தமிழ் - திரு. குழந்தை
சாயி அக்கடமி
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்
[C/3630]

Personal Classes
MS Office
CorelDRAW
Page Maker
Photo Shop
நேரம்: மாலை 4.00-9.00
மேலதிக விபரங்களிற்கு
STP 54A, Palaly Road, Jaffna
T.P:2674



யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த திரு. இ. கணேசன் (தென்மராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர்) அவர்களுக்கு அதிபர் திரு. க. ஆனந்தராஜா மாலை அணிவித்து வரவேற்கிறார். அருகில் சிறப்பு விருந்தினர் திரு. த. இராசலிங்கம் (யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்களும் காணப்படுகிறார்.



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையில் நடைபெற்ற விழாவில் பிரம்மஸ்ரீ காரை. கு. சிவராஜசர்மாவுக்கு செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் பொன்னாடை போர்த்தி கேடயம் வழங்கிக் கௌரவிக்கிறார்.

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA
J.T.I
புதிய பிரிவு ஆரம்பம்
09.03.2002
Diploma in MS Office
Certificate Course
Visual Basic
Visual FoxPro
Corel Draw
Auto Cad
Ms Excel
Ms Access
J.T.I
No.07, Palaly Road, Jaffna.

சுவைப் பிரியர்களே! இதோ புதியதோர் அறிமுகம்!!
ஜீவ மிக்சர் Jeeva Mixture
மிக்சர், பகோடா, பொரித்த கடலை, கச்சான், மரவள்ளிப் பொரியல், பூந்தி மற்றும் பற்பல....
★ உண்ண உண்ண மேலும் மேலும் உண்ணத் தூண்டுவது
★ கறு முறு சிற்றுண்டிகள்
★ சுகாதாரமுறைப்படி சுத்தமாகத் தயாரிக்கப்பட்டது
★ உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் இரசாயனக் கலப்பற்றது
திருமண வைபவங்கள் ஏனைய மங்களகரமான வைபவங்களுக்கு விசேடமாக செய்து கொடுக்கப்படும். (ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்)
PARA MASTER கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகாமை)

INSTITUTE DAY
OF
JAFFNA COLLEGE
Institute of Technology & Institute of Agriculture
Venue: Abels Auditorium JCIT, Vaddukoddai.
Time: 2.00 P.M. on 5th March 2002
Chief Guests:
Prof. S. Ratnajeevan. H. Hoole
(Dept. of Electrical & Electronics Eng., University of Peradeniya)
&
Dr. (Mrs) Dushyanthi Hoole
(Dept. of Chemical Eng., University of Peradeniya)
Will distribute the awards.
All Students & Friends are cordially Invited.
Director, JCIT
Principal, JCIA
[C/3629]

YOGI HOME SCIENCE ACADEMY
வட்டுக்கோட்டையிலும், யாழ்ப்பாணத்திலும் குறுகிய கால புதிய வகுப்புக்கள் மார்ச் 9 ஆம், 11 ஆம் திகதிகளில் ஆரம்பமாக உள்ளன.
1. இலகுவழித் தையல் முறைகள் 2. கேக் ஐசிங் 3. சமயற்கலை
4. மேலைத்தேய ஐசிங் அலங்காரங்களும், மாச்சீனி மலர் அலங்காரங்களும் (Fondant Icing Structures & Sugar Flowers)
5. முக ஒப்பனையும் தலை அலங்காரங்களும் (15 வகுப்புக்கள் மட்டும்)
6. பூக்கள் தயாரித்தலும், அலங்கரித்தலும்
7. துணியில் வர்ண அலங்கரிப்பு (Fabric Paintings) (10 வகுப்புக்கள் மட்டும்)
யாழ்ப்பாணத்தில் 09.03.2002 அன்று. வட்டுக்கோட்டையில் 11.03.2002 அன்று.
லீலா இரட்ணசபாபதி, "திருமகள் வாசம்", பிரதான வீதி (வட்டு தபாலகத்திற்கு அருகில்), வட்டுக்கோட்டை.
இரண்டு இடங்களிலும் சேரவிரும்பும் மாணவிகள் யாழ்ப்பாணத்தில் உடன் தொடர்பு கொள்ளவும். 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
(4765)

இப்பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.